இந்த நாள்

- குரோதி வருடம் வைகாசி மாதம் 20-ம் நாள். ஞாயிற்றுக்கிழமை. தேய்பிறை.
- திதி: ஏகாதசி அதிகாலை 3.35 மணி வரை; அதன் பிறகு துவாதசி.
- நட்சத்திரம்: ரேவதி இரவு 1.40 மணி வரை; அதன் பிறகு அசுவினி.
- யோகம்: அமிர்த யோகம்.
- நல்ல நேரம்: காலை 7.30 - 8.30; மாலை 3.30 - 4.30 மணி வரை.
- ராகு காலம்: மாலை 4.30 - 6.00 மணி வரை.
- எமகண்டம்: மதியம் 12.00 - 1.30 மணி வரை.
- சந்திராஷ்டமம்: ஆயில்யம், மகம்.
- சூலம்: மேற்கு; பரிகாரம்: வெல்லம்

வானிலை

இன்று		நாளை	
அதிகபட்சம்	குறைந்தபட்சம்	அதிகபட்சம்	குறைந்தபட்சம்
38 C / 100.4 F	28 C / 82.4 F	36 C / 96.8 F	27 C / 80.6 F

வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். லேசான மழை பெய்யும்.

டிஎன்பிஎஸ்சி குரூப்-4 மாதிரி வினா-விடை பக்கம் 14

பொதுமக்களை அச்சுறுத்திய 3 வாலிபர்கள் கைது பக்கம் 15

வெப்ப அலையுடன் 100 டிகிரி அளவில் வெயில்

வீட்டிற்குள் முடங்கிய பொதுமக்கள்

■ முக்கிய வீதிகள், சாலைகள் வெறிச்சோடியது

■ பள்ளி கூட திறப்பும் ஒத்திவைப்பு

▶ பகலெல்லாம் சுட்டெரித்த சூரியனா இது: முத்துப்பேட்டையில் பகல் முழுவதும் கடும் வெயில் மக்களை வாட்டி வதைத்துவிட்டு மாலை சத்தமின்றி மறையும் சூரியனின் ரம்மியமான காட்சி. இடம்: முத்துப்பேட்டை கோவிலூர் வடக்காடு கோட்டகம்.

திருவாரூர், ஜூன் 2: திருவாரூர் மாவட்டத்தில் நேற்று வெப்ப அலையுடன் 100 டிகிரி அளவில் வெயில் சுட்டெரித்ததால் பெரும்பாலான பொது மக்கள் வீடுகளுக்குள்ளே முடங்கியதால் சாலைகள் அனைத்தும் வெறிச்சோடி காணப்பட்டன.

தமிழகம் முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் 105 டிகிரி முதல் 115 டிகரி வரையில் கடந்த 2 மாத காலமாக வெயில் சுட்டெரித்து வந்தது. அதன்படி திருவாரூர் மாவட்டத்திலும் 105 டிகிரி வெயில் சுட்டெரித்து வந்த நிலையில் இதன் காரணமாக பொது மக்கள், கல்லூரி மாணவ, மாணவிகள், தொழிலாளர்கள் குறிப்பாக கட்டிட தொழிலாளர்கள் உட்பட அனைவரும் கடுமையாக பாதிக்கப்பட்டனர். மேலும் இந்த வெயில் காரணமாக மரம், செடி, கொடிகளின் இலைகளும் உதிர்ந்து காய்ந்து போகும் நிலை ஏற்ப்பட்டது. மேலும் கால்நடைகளுக்கும் மேய்சலுக்கு புல் கிடைக்காமல் தவித்து வந்தன.

இந்நிலையில் வெப்ப சலணம் காரணமாக தமிழகத்தின் பெரும்பாலான மாவட்டங்களில் மழை பெய்வதற்கு வாய்ப்புள்ளதாக வானிலை மையம் அறிவித்திருந்த நிலையில் கடந்த மாதம் 8ம் தேதி முதல் 22ம் தேதி வரையில் 2 வார காலத்திற்கு திருவாரூர் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் மிதமான மழை பெய்ததால் வெப்பம் குறைந்ததையடுத்து பொது மக்கள் மகிழ்ச்சியடைந்தனர். மேலும் இந்த தொடர்மழையினையொட்டி 16ம் தேதி அதிகாலை முதல் காலை 10 மணி வரையில் மாவட்டம் முழுவதும் கனமழை பெய்தது. இதன் காரணமாக 6 மணி நேரத்தில் மாவட்டம் முழுவதும் மொத்தம் 457.8 மி.மீ மழை பதிவானது.

இதில் அதிகளவாக மன்னார்குடியில் 13 செ.மீ அளவில் மழை பெய்தது. மேலும் இந்த மழை காரணமாக காய்ந்துபோன மரங்களில் இலை துளிர்த்து வருவதுடன் ஆங்காங்கே புல்வெளிகளும் முளைத்துள்ளதால் இதன் காரணமாக மேய்சலுக்கு இடமின்றி தவித்த கால்நடைகளுக்கும் இந்த மழையானது பயனுள்ளதாக உள்ளது என்ற போதிலும் பருத்தி மற்றும் எள் சாகுபடி பயிர்களுக்கு கன மழை உகந்தது அல்ல என்பதால் இதன்காரணமாக இந்த பயிர்களுக்கு பாதிப்பு ஏற்பட்டது. இதையடுத்து விவசாயிகள் கவலையடைந்த நிலையில் கோடை நெல் சாகுபடிக்கு இந்த மழையானது உகந்ததாக அமைந்ததால் கோடை நெல் சாகுபடி விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

மேலும் 2 வார காலத்திற்கு பெய்த இந்த தொடர் மழை காரணமாக மாவட்டம் முழுவதும் இருந்து வரும் நீர் நிலைகளில் ஓரளவு நீர் தேங்கியதன் காரணமாக நிலத்தடி நீர் மட்டம் என்பது பாதுகாக்கப்பட்டது. மேலும் அக்னி நட்சத்திரம் எனப்படும் கத்திரி வெயிலும் இந்த மழையினால் காணாமல் போனது.

இந்நிலையில் தற்போது மீண்டும் வெயில் என்பது கடந்த 4 நாட்களுக்கும் மேலாக சுட்டெரித்து வருவதால் மீண்டும் பொது மக்கள் மற்றும் தொழிலாளர்கள் கடும் துன்பத்திற்கு ஆளாகியுள்ளனர். அதன்படி தமிழகம் முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் 100 டிகிரிக்கு மேல் வெயில் சுட்டெரித்து வருகிறது. மேலும் இந்த வெயில் என்பது தமிழகம் மட்டுமின்றி உத்திரபிரதேசம், பீகார், டெல்லி உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் கடுமையாக வீசி வருவதன் காரணமாக உயிர் பலிகளும் ஏற்பட்டு வருகின்றன. இதனையொட்டி தமிழகத்தில் மாணவர்களின் நலன் கருதி பள்ளிகள் திறப்பை வரும் 10ம் தேதிக்கு தமிழக அரசு ஒத்திவைத்துள்ளது.

> **தற்போது மீண்டும் வெயில் என்பது கடந்த 4 நாட்களுக்கும் மேலாக சுட்டெரித்து வருவதால் மீண்டும் பொது மக்கள் மற்றும் தொழிலாளர்கள் கடும் துன்பத்திற்கு ஆளாகியுள்ளனர். அதன்படி தமிழகம் முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் 100 டிகிரிக்கு மேல் வெயில் சுட்டெரித்து வருகிறது. மேலும் இந்த வெயில் என்பது தமிழகம் மட்டுமின்றி உத்திர பிரதேசம், பீகார், டெல்லி உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் கடுமையாக வீசி வருவதன் காரணமாக உயிர் பலிகளும் ஏற்பட்டு வருகின்றன.**

இந்நிலையில் திருவாரூர் மாவட்டத்தில் நேற்றும் வெப்ப அலையுடன் 100 டிகிரிக்கு மேல் வெயில் சுட்டெரித்தால் பெரும்பாலான பொது மக்கள் வீடுகளுக்குள்ளே முடங்கியதால் திருவாரூர் நகரில் எப்போதும் பரபரப்பாக காணப்படும் நேதாஜி சாலை, பனகல் சாலை, கடைத்தெரு மற்றும் நகரின் தேரோடும் 4 வீதிகள் மற்றும் நன்னிலம், குடவாசல் உட்பட மாவட்டம் முழுவதும் சாலைகள் அனைத்தும் வெறிச்சோடி காணப்பட்டது குறிப்பிடத்தக்கது.

போர்வெல், கிணற்று பாசனம் மூலம்

15 ஆயிரம் ஏக்கரில் குறுவை சாகுபடி பணி

66 டன் விதைநெல் கையிருப்பு

வேளாண் துறையினர் அழைப்பு

▶ நன்னிலம் ஒன்றியம் பனங்குடி கிராமத்தில் குறுவை சாகுபடி செய்வதற்காக வரப்பு அமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ள விவசாய தொழிலாளி. அடுத்தபடம்: நன்னிலம் வேளாண்மை விரிவாக்க மையத்தில் இருப்பு வைக்கப்பட்டுள்ள விதை நெல் மூட்டைகளை துணை இயக்குனர் லட்சுமி காந்தன் ஆய்வு செய்தார்.

திருவாரூர், ஜூன் 2: திருவாரூர் மாவட்டத்தில் இதுவரையில் 15 ஆயிரம் ஏக்கரில் குறுவை சாகுபடி நடைபெற்றுள்ள நிலையில் மேலும் சாகுபடி பணியில் விவசாயிகள் மும்முரமாக ஈடுப்பட்டு வருகின்றனர்.

டெல்டா மாவட்டங்களில் தொடர்ந்து 3 ஆண்டு காலமாக கடந்தாண்டு வரையில் தூர்வாரும் பணியானது முடிக்கப்பட்டு விவசாயத்திற்காக உரிய நாளில் மேட்டூர் அணையானது குறித்த காலத்தில் திறக்கப்பட்டு வருவதுடன் குறுவை தொகுப்பு திட்டம், பயிர் கடன்களை அரசு வழங்கியது, விவசாயத்திற்கு தேவையான விதை மற்றும் உரங்கள் உரிய நேரத்தில் வழங்கப்பட்டது போன்றவற்றின் காரணமாக வழக்கத்தை விட கூடுதலான பரப்பளவில் குறுவை சாகுபடியை விவசாயிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

அதன்படி, திருவாரூர் மாவட்டத்தில் வழக்கமான குறுவை சாகுபடி பரபரப்பளவு 97 ஆயிரம் ஏக்கர் என்ற நிலையில் கூடுதலாக 80 ஆயிரம் ஏக்கர் பரபரப்பளவு என மொத்தம் ஒரு லட்சத்து 77 ஆயிரம் ஏக்கரில் சாகுபடியை விவசாயிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் நடப்பாண்டில் இந்த குறுவை சாகுபடி பணிகளை தற்போது விவசாயிகள் தொடங்கி உள்ளனர். அதன்படி, போர்வெல்கள் இருந்து வரும் பகுதிகளில் விதை நாற்றாங்கால் அமைப்பது மட்டுமின்றி நேரடி விதைப்பு மற்றும் நடவு பணிகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

நன்னிலம், குடவாசல், வலங்கைமான், நீடாமங்கலம் மற்றும் மன்னார்குடி ஆகிய ஒன்றியங்களில் தற்போது வரையில் 15 ஆயிரம் ஏக்கரில் இந்த குறுவை சாகுபடி பணி நடைபெற்றுள்ளது. மேலும் பருவ மழை பொய்த்து போனது மற்றும் கர்நாடக அரசின் பிடிவாதம் காரணமாக மேட்டூர் அணையில் தற்போது குறைந்தளவே தண்ணீர் இருந்து வரும் நிலையில் நடப்பாண்டில் குறுவை சாகுபடிக்கு உரிய நீர் கிடைக்குமா என போர்வெல் வசதி இல்லாத பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் கவலையில் இருந்து வருகின்றனர். தற்போது காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் பருவமழை பெய்து வருவதன் காரணமாக மேட்டூர் அணைக்கு கூடுதலான அளவில் நீர் கிடைக்கும் என நம்பிக்கையில் விவசாயிகள் இருந்து வருகின்றனர்.

குறுவை சாகுபடிக்கு தேவையான விதை நெல்களான கோ55, ஆடுதுறை 53, ஏ.எஸ்.டி 16 மற்றும் டிபிஎஸ் 5 ஆகிய விதை நெல் ரகங்கள் தற்போது 66 டன் அளவில் கையிருப்பில் இருப்பதாகவும், வரும் 2 வது வாரத்தில் மேலும் 120 டன் விதை நெல்கள் வரவுள்ளதாகவும் வேளாண் இணை இயக்குனர் ஏழுமலை தெரிவித்துள்ளார்.

மேலும் குறுவை சாகுபடிக்கு தேவையான டி.ஏ.பி, காம்ளக்ஸ், யூரியா மற்றும் பொட்டாஷ் போன்ற உரங்கள் கூட்டுறவு சங்கங்களில் தேவையான அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளதால் இந்த உரங்களை விவசாயிகள் பெற்று பயனடையலாம் என்று ஏழுமலை தெரிவித்துள்ளார்.

தலைமறைவாக இருந்த பிரபல ரவுடி கைது

திருவாரூர், ஜூன் 2: நன்னிலம் தாலுகா பேரளம் போலீஸ் சரகத்திற்குட்பட்ட திருமீயச்சூர் வடபாதியை சேர்ந்தவர் பிரபல ரவுடி பாடலீஸ்வரன் (47). இவர் மீது பேரளம் போலீஸ் ஸ்டேசன் மட்டுமின்றி மயிலாடுதுறை, நாகை, கடலூர் உள்ளிட்ட மாவட்டங்களில் அடிதடி, கட்டபஞ்சாயத்து மற்றும் வழிபறி என 30க்கும் மேற்பட்ட வழக்குகள் நிலுவையில் உள்ளது. கடந்த 2014ம் ஆண்டு கடலூரில் நடைபெற்ற இரட்டை கொலை வழக்கில் முக்கிய குற்றவாளி மட்டுமின்றி இவர் மீது 7 கொலை முயற்சி வழக்குகளும் நிலுவையில் இருந்து வருகின்றன.

இந்நிலையில் கடந்த ஜனவரி 1ம் தேதி மாவட்ட எஸ்.பி ஜெயக்குமார் பரிந்துரையின் பேரிலும், கலெக்டர் சாருஸ்ரீ உத்தரவின் பேரிலும் இவர் குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு திருச்சி மத்திய சிறையில் அடைக்கப்பட்ட நிலையில் அதன் பின்னர் ஜாமீனில் வெளிவந்தவர் தொடர்ந்து 3 மாத காலமாக நீதிமன்றத்தில் ஆஜராகாமல் தலைமறைவாக இருந்து வந்தார்.

இதனையடுத்து கைது செய்வதற்கு நன்னிலம் குற்றவியல் நீதிமன்றத்தில் 3 பிடி கட்டளைகள் பிறப்பிக்கப்பட்ட நிலையில் இவரை கைது செய்வதற்கு மாவட்ட எஸ்.பி ஜெயக்குமார் உத்தரவின் பேரில் சப்இன்ஸ்பெக்டர் சரவணன் தலைமையிலான தனிபடையினர் இவரை தேடும் பணியில் ஈடுப்பட்டனர்.

இந்நிலையில் இவர் சென்னையில் பதுங்கியிருப்பதாக கிடைத்த தகவலின் பேரில் அங்கு சென்ற போலீசார் அவரை கைது செய்து நேற்று நன்னிலம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி திருச்சி மத்திய சிறையில் அடைத்தனர்.

குற்றவாளியை கைது செய்வதற்கு சிறப்பாக செயல்பட்ட சப்இன்ஸ்பெக்டர் சரவணன் தலைமையிலான போலீசாரை எஸ்.பி ஜெயக்குமார் பாராட்டியுள்ளனர்.

போலீசாருக்கான இலவச கண் சிகிச்சை முகாம்

எஸ்பி துவக்கி வைப்பு

திருவாரூர், ஜூன் 2: திருவாரூரில் போலீசாருக்கான சிறப்பு கண் சிகிச்சை முகாமை எஸ்.பி ஜெயகுமார் துவக்கி வைத்தார்.

திருவாரூர் ஆயுதப்படை மைதானத்தில் போலீசார் மற்றும் அவர்களது குடும்பத்தினர் பயன் பெறும் வகையில் கும்பகோணம் டாக்டர் அகர்வால் கண் மருத்துவமனை சார்பில் இலவச கண் சிகிச்சை முகாம் நடைபெற்றது. இந்த முகாமை மாவட்ட எஸ்.பி ஜெயக்குமார் தொடங்கி வைத்து கண் பரிசோதனை செய்துகொண்டார். அவரை தொடர்ந்து கூடுதல் எஸ்.பி ஈஸ்வரன் உள்ளிட்ட போலீசார் பலரும் தங்கள் குடும்பத்தினருடன் கண் பரிசோதனை மேற்கொண்டனர்.

▶ திருவாரூரில் போலீசாருக்கான சிறப்பு கண் சிகிச்சை முகாமை எஸ்.பி ஜெயகுமார் துவக்கி வைத்தார்.

ELUMALAIYAN POLYTECHNIC COLLEGE
KOLLUMANGUDI - 609 403
(Ph.): 9585106168, 9566657605
WANTED

HOD	Mechanical Engineering (BE/ME) with experience
LECTURER	English (M.A.),
	Bio Medical Engineering (B.E),
	Agricultural Engineering (B.E),
	Mechanical Engineering (B.E)

INTERVIEW DATE : 05.06.2024 (WEDNESDAY)
APPLY IMMEDIATELY SALARY NEGOTIABLE
SEND YOUR RESUME TO OUR MAIL ID: epc703@gmail.com - PRINCIPAL

மகிழ்ச்சியூட்டும் 26-ம் ஆண்டு சேர்க்கை 2024 - 2025
மன்னை நாராயணசாமி நர்சிங் & பிசியோதெரபி கல்லூரி
கல்லூரி வளாகம்: தஞ்சை - கும்பகோணம் Highway, மாத்தூர், தஞ்சாவூர். போன்: 04374-241022, 240064
INC & TNC அங்கீகாரம் பெற்றது. TN Dr.M.G.R. மருத்துவப் பல்கலைக்கழகம் அனுமதி பெற்றது.

DGNM (3 Years)	ஸ்டாப் நர்ஸிங் பட்டயபடிப்பு	தகுதி: +2 Pass Any Group
B.Sc., (NURSING) (4 Years)	பி.எஸ்ஸி நர்சிங் பட்டப்படிப்பு	தகுதி: +2 Pass With Science Group
BPT (4 ½ Years)	பிசியோதெரபி பட்டப்படிப்பு	
MPT (2 Years)	முதுகலை பட்டப்படிப்பு NEUROLOGY ORTHOPAEDICS CARDIOLOGY	தகுதி: A Pass in BPT

Cell: 9443205205, 9442171715, 9865859094

ICICI Home Finance
கார்ப்பரேட் அலுவலகம்: ஐசிஐசிஐ ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட் ஐசிஐசிஐ எச்எஸ்சி டவர், அந்தேரி-குர்லா சாலை, அந்தேரி (கிழக்கு), மும்பை-400059, இந்தியா
கிளை அலுவலகம்: 2வது தளம், எண்: 75 D, இலட்சுமி வால்ட்ஸ், மனை-A-8, சாலை ரோடு, தில்லை நகர், திருச்சிராப்பள்ளி-620018
[விதி 8(6) விதிமுறையை காண்க]
அசையாச் சொத்துகள் விற்பனை அறிவிப்பு
கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) விதிமுறையுடன் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 கீழ் அசையாச் சொத்துகள் விற்பனைக்கான மின்-ஏலம் விற்பனை அறிவிப்பு.
இதன்மூலம் பொதுமக்களுக்குப் பொதுவாக மேலும் கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமின்தாரர்(கள்) ஆகியோருக்குக் குறிப்பிட்டு வழங்கப்படும் அறிவிப்பாவது கடனீட்டு கடனீந்தோரிடம் அடமானம்/உரிமை அளிக்கப்பட்ட, ஐசிஐசிஐ ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரியால் அடையாளப்பூர்வ சுவாதீனம் செய்யப்பட்டிருக்கும் கீழே விவரிக்கப்பட்ட அசையாச் சொத்தானது இதன்கீழ் கொடுக்கப்பட்ட குறு விவரங்களின்படி "உள்ளது உள்ளவிடத்தில்", "உள்ளது உள்ளவாறு", மேலும் "உள்ளது எதுவோ அது" அடிப்படையில் விற்பனை செய்யப்படவுள்ளது.

வ. எண்	கடன்தாரர்(கள்)/ உப கடன்தாரர்கள்/ ஜாமீன்தாரர்கள்/ சட்டப்பூர்வ வாரிசுகள் பெயர். கடன் கணக்கு எண்	தெரிந்த வில்லங்கங்கள் ஏதேனுமிருந்தால் அவற்றுடன் கூடிய கடனீட்டுச் சொத்து(கள்) விவரங்கள்	நிலுவைத் தொகை	நிர்ணய விலை / முன்வைப்புத் தொகை	சொத்து பார்வையிடும் நாள் மற்றும் நேரம்	ஏலம் நாள் & நேரம்
(A)	(B)	(C)	(D)	(E)	(F)	(G)
1.	B.கோகுல் & கோகுல் ராவ் & கோகுல்ராவ் பாபுராவ் (கடன்தாரர்) பத்மா பாய் G (உப-கடன்தாரர்) G ஷர்மி (உப-கடன்தாரர்) கடன் கணக்கு எண், NHTNJ00001247018 & NHTNJ00001247019 & LHTNJ00001275006 & LHTNJ00001253702 & LHTRI00001388104	T.S எண் 2857&2858, பிளாக் 36, வார்டு 4, நாணயக்கார செட்டி தெரு வடக்கு வரிசை, தஞ்சாவூர் மாநகராட்சி தஞ்சாவூர், தமிழ்நாடு 613001	Rs. 1,64,08,305/- மே 16, 2024	Rs. 1,58,02,920/- / Rs. 15,80,300/-	ஜூலை 01, 2024 11:00 AM 03:00 PM	ஜூலை 10, 2024 02:00 PM 03:00 PM

இயங்குதள ஏலம் எங்கள் ஏல முகமை குளோப் டெக் இணையதளத்தில் (URL Link- https://BestAuctionDeal.com) நடத்தப்படும். அடமானதாரர்களுக்கு/அறிவிப்பு மூலம் ஜூலை 09, 2024 மாலை 05.00 மணிக்கு முன்பு வரை மொத்த நிலுவைகளை மேற்கொண்டு வட்டியுடன் செலுத்த ஒரு கடைசி வாய்ப்பு வழங்கப்படுகிறது. இல்லையெனில் இந்த கடனீட்டுச் சொத்துகள் மேற்கூறிய அட்டவணைப்படி விற்பனை செய்யப்படும்.
எதிர்நோக்கும் ஏலதாரர்(கள்) ஐசிஐசிஐ ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட், இரண்டாவது தளம், எண்.75D, லட்சுமி வாலட்ஸ், மனை எண்-A-8, சாலை ரோடு, தில்லை நகர், திருச்சிராப்பள்ளி-620018 இடத்தில் ஜூலை 09, 2024 மாலை 04.00 மணிக்குள்ளாகவோ அல்லது அதற்கு முன்போ முன்வைப்புத்தொகை (EMD) RTGS/ கேட்பு வரைவோலை (DD) டூரில் E காண்க) சமர்ப்பிக்க வேண்டும். எதிர்நோக்கும் ஏலதாரர்(கள்) பதிவு படிவம், ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள் வரையறைகள் படிவம் ஆகியவற்றை ஐசிஐசிஐ ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட், இரண்டாவது தளம், எண்.75D, லட்சுமி வாலட்ஸ், மனை எண்-A-8, சாலை ரோடு, தில்லை நகர், திருச்சிராப்பள்ளி-620018 இடத்தில் ஜூலை 09, 2024 மாலை 05.00 அல்லது அதற்கு முன்பு கட்டாயம் சமர்ப்பிக்க வேண்டும் என்பதை கவனத்தில் கொள்ளவும். முன்வைப்புத் தொகை கேட்பு வரைவோலை (DD) ஒரு தேசியமயமாக்கப்பட்ட/ அட்டவணையிடப்பட்ட வங்கியிலிருந்து தஞ்சாவூரில் மாற்றத்தக்க வகையில் "ICICI Home Finance Company Ltd.- Auction" என்ற பெயரில் பெறப்பட வேண்டும்.
சொத்து பார்வையிடுதல், ஏல விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அல்லது ஒப்பந்தப்புள்ளிகள் சமர்ப்பித்தல் குறித்த அனைத்து கூடுதல் விவரங்களுக்கு, 9920807300 எண்ணில் ஐசிஐசிஐ ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட் நிறுவனத்தையோ அல்லது எங்கள் விற்பனை & சந்தைப்படுத்துதல் கூட்டுதாரர் நெக்ஸ்லென் சொலூசன்ஸ் பிரைவேட் லிமிடெட் அவர்களையோ தொடர்பு கொள்ளவும்.
அதிகாரப்பூர்வ அதிகாரி எந்த மேற்கொண்டு காரணங்களையும் தெரிவிக்காமல் ஏதேனும் அல்லது அனைத்து ஏலப்புள்ளிகளையும் நிராகரிக்க உரிமை கொண்டுள்ளார்.
விரிவான விற்பனை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, காண்க https://www.icicihfc.com/
நாள்: ஜூன் 02, 2024
இடம்: தஞ்சாவூர்
அதிகாரப்பூர்வ அதிகாரி
ஐசிஐசிஐ ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்